# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 22 | February பிப்ரவரி | 2022

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 6 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 13 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா**, M.Th.,
**R. ஆண்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

ஞாயிறு மதியம் 3:30 மணி

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**
Every Sundays 2pm
Speakers:
Jerry Bates & Kingsly Rajah




**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

விபரங்களுக்கு :

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

படைப்பாளராகிய கர்த்தரின் மகிமையை
பறைசாற்றும் பரிசுத்த வார்த்தை.


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International

# ஒரு மாபெரும் தொடக்கம்

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



*கர்த்தருடைய வேதத்தின் மீது பற்றுக்கொண்ட கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்.*

இந்த மாதம், ஆதியாகமம் புத்தகத்தினை பற்றியும், அதிலிருந்து சில பாடங்களையும் தியானம் செய்வோம்.

இந்த உலகத்தில் உள்ள நூல்களில் மிகவும் பழமை வாய்ந்த நூல் இது. ஆயினும், எந்த தலைமுறைக்கும் வாழ்வின் செய்திகளை அளிக்கின்றதில் மிகவும் இளமையான புத்தகம் இதுவாகும். உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றான எபிரேய மொழியில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. புத்தகத்தினை மோசே தான் எழுதினார் என வேதாகம ஆசிரியர்கள், யூத பாரம்பரியங்கள் மற்றும் வரலாற்று ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.

மோசேயின் நாட்களில் எழுத்துக்களே இல்லை என எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர். ஆயினும் பாபிலோன் அருகே உள்ள குன்று ஒன்றில் செய்த தொல்பொருள் ஆராய்ச்சியில், கருப்புத்தூண் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் சட்டங்கள் நிறைய எழுதியிருந்தது. அவைகள் அந்த நாட்டை ஆண்ட ஹமுரபி என்ற அரசனால் கி.மு. 1750ல், அதாவது மோசே ஆதியாகமம் புத்தகத்தினை எழுதுவதற்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டதாக இருந்தது. ஆகையால், ஆய்வுகளும் மோசே எழுதியிருக்க வாய்ப்பு உண்டு என்றே உறுதிப்படுத்துகின்றன.

இந்த பிரமாண்டமான உலகம், அண்ட சராசரங்கள் அனைத்தும் எப்படி வந்தது என்று விளக்கமாகவும் மற்றும் தெளிவாகவும் சொல்லுகின்ற புத்தகமாக இருக்கின்றது. ஒவ்வொன்றின் துவக்கத்தினை பற்றியும் பேசுகின்றது. படைப்பின் துவக்கம், உலகத்தின் துவக்கம், உயிரினங்களின் துவக்கம், உருவகங்களின் துவக்கம், பாவத்தின் துவக்கம், சாபத்தின் துவக்கம், தண்டனையின் துவக்கம், பாவமன்னிப்பின் துவக்கம், பலிகளின் துவக்கம், பரிசுத்தத்தின் துவக்கம், மொழிகளின் துவக்கம், இரட்சிப்பின் துவக்கம், சத்தியத்தின் துவக்கம், சத்துருவின் துவக்கம், பொய்யின் துவக்கம், வாக்குத் தத்தத்தின் துவக்கம், வஞ்சனையின் துவக்கம், தலைமுறைகளின் துவக்கம் என துவக்கங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லுகின்றன.

கர்த்தருடைய படைப்புகளை பார்க்கும் போது அவைகள் மிகவும் பிரமிப்பாக உள்ளதைப் போல, படைத்த விதமும் பிரமிப்பாகவே உள்ளது. முதலில் உணர்வும் (Knowledge) உயிரும் (Life), மற்றும் உணர்ச்சி (Emotional) அற்றவைகளை படைத்தார். வெளிச்சம், ஆகாய விரிவு, சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் போன்றவற்றை சொல்லலாம். உணர்ச்சி அற்றதால், அவைகள் கோவப்படவோ, அழுகவோ, வருத்தப்படவோ செய்யாது. உயிர் அற்றதால் அவைகள் வளராது. எந்த அளவில் படைத்தாரோ அதே அளவில், நிலையில் அது இருக்கும். உணர்வும் கிடையாது ஆகையால், நீங்களோ, நானோ எதாவது சொன்னால் புரிந்துக்கொள்ளவும் முடியாது. சூரியனே இன்னைக்கு வெப்பம் அதிகமாக இருக்கு, கொஞ்சம் குறைச்சுக்கோனு சொன்னால், அதனால் புரிந்துகொள்ள முடியுமா? முடியாதல்லவா.

பிறகு உயிருள்ளவைகளாகிய ஆனால் உணர்ச்சியும் உணர்வும் அற்றவை களானவைகளை படைத்தார். உதாரணமாக, மரம் செடி கொடிகள் போன்ற தாவரங்கள். அவைகளுக்கு உயிர் உண்டு, அதனால் வளர்கின்றது. ஆயினும் உணர்ச்சியும் (சோகம், வருத்தம், மகிழ்ச்சி) மற்றும் உணர்வும் (புரிந்துகொள்ளுதல் அதாவது அறிவு) அற்றவைகளை படைத்தார். பிறகு உயிர், உணர்ச்சி

மற்றும் குறைந்த அறிவுள்ள, அதே வேளையில் ஆத்துமா அற்றவைகளான பறவைகள், ஊர்வன, நீந்துவன மற்றும் விலங்கினங்கள் போன்றவற்றை படைத்தார். இறுதியாக உணர்ச்சி, உயிர், உணர்வு மற்றும் ஆத்துமா எல்லாம் நிறைவான மனிதனை படைத்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக படைத்தார்.

**ஆதி 1:26,27** "பின்பு தேவன்; நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் நம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." மற்றும் **ஆதி 2:7** "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய அவர், தம்மால் எல்லாவற்றையும் ஒரே இமைப்பொழுதில் உண்டாக்க முடிந்தாலும், அவைகளை 6 நாட்களாக படைத்தார், மற்றும் 7ம் நாளில் ஓய்ந்திருந்தார். அதனால்தான் நமக்கு வாரத்திற்கு 7 நாட்கள் கிடைத்தது. இந்த உலகில், கடவுளின் படைப்பிலே மிகச்சிறந்த படைப்பு மனிதனே! எல்லாவற்றையும் "உண்டாகக்கடவது" என்ற ஒரே வார்த்தையினாலே உண்டாக்கியவர், மனிதனை மாத்திரம் தனது கரங்களினாலே, மண்ணிலிருந்து உண்டாக்கினார். அவனுக்கான உயிரையும் ஆன்மாவையும் தன்னிடத்திலிருந்து, தன்னுடையதைக் கொடுத்தார். இது மிகவும் பிரமிப்பானதே! உதாரணமாக, "உண்டாகக்கடவது" என்ற ஒரே வார்த்தையில் வித்தியாசமான தோற்றங்களில், குணங்களில், நிறங்களில் மற்றும் மணங்களில் எத்தனை வகையான தாவரங்கள்! அவைகளில் எத்தனை விதமான மலர்கள், காய்கள் மற்றும் கனிகள்! அவைகளில், வித்தியாசமான விதைகளுடன் படைத்துள்ளார்.

அதேப் போன்று, மனிதர்களையும் அவரால் படைத்திருக்க முடியும். ஆயினும் அவருடைய படைப்புகளில் நாம் சிறப்பானவர்களே! அவருக்கு பிரியமானவர்கள் மற்றும் ஒரு மாபெரும் நோக்கத்திற்கானவர்கள். இதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்காக தான் அவர் இவ்வளவு மெனக்கெட்டுள்ளார் என்பதை நாம் நிச்சயம் உணர வேண்டும். நாம் கர்த்தருடைய படைப்புகளை பார்த்து பிரமிக்கின்றோம். ஆயினும் மிகவும் பிரமிப்பான படைப்பு நாம் தான். **சங்கீதம் 139:14,** ''நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உணடாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்."

கடவுளின் படைப்பில் ஆன்மாவோடு படைக்கப்பட்டது, மனிதர்களாகிய நாம் மட்டும் தான். **கர்த்தருடைய படைப்புகள் ஒவ்வொன்றும் ஒரு நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவைகள் அவற்றை நிறைவேற்றும் போது, அவரை மகிமைப்படுத்துகின்றன.** அதேபோல மனிதர்களாகிய நாமும் நாம் படைக்கப்பட்டதின் நோக்கமதை நிறைவேற்றும் போது, நாமும் நம்மை படைத்தவரை மகிமைப்படுத்த முடியும்.

**சங்கீதம் 19:1,2** "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது."

கர்த்தருடைய படைப்புகள் அவரை மகிமைப்படுத்துகின்றன என வசனங்கள் சொல்லுகின்றது. மேலும் அவைகள் அனைத்தும் அவரை அறிக்கை செய்கின்றன என்றும் சொல்லப்பட்டுள்ளது. இது சாத்தியமான ஒன்றா? ஏனெனில் "அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை." **(சங் 19:3)**. பிறகு எப்படி இது சாத்தியமானது? அவைகள் ஒவ்வொன்றும் கர்த்தர் தங்களை எதற்காக படைத்தாரோ, அந்த வேலையை மிகவும் நேர்த்தியாக செய்வதின் மூலம், அவரை அறிவித்து மற்றும் மகிமைப்படுத்துகின்றன. அதாவது தங்களது ஒழுங்கமைவின் மூலம் தங்களை படைத்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதையும், அவர்

மகிமைக்குரியவர் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. நாமும், கர்த்தர் நம்மை ஏன் படைத்தார் என்பதை அறிந்து, உணர்ந்து, அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழும் போது, நாமும் மற்ற படைப்புகளைப் போல அவரை மகிமைப்படுத்தி, நம் வாயின் மூலமும், வாழ்வின் மூலமும் அவரை அறிக்கையிட முடியும்.

ஆதியாகமம் புத்தகத்தில், இந்த உலகம் படைக்கப்பட்ட நாள் முதல் 2250 ஆண்டு கால சரித்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதியாகமம் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள நபர்கள், ஊர்கள் எல்லாம் பொய்யென நிரூபிக்க எடுக்கப்பட்ட முயற்சியில் தோற்று, எல்லா தொல்பொருள் ஆய்வுகளும் ஆதியாகமத்தில் உள்ள நபர்கள் மற்றும் ஊர்களும் உண்மையென அவர்களே ஒத்துக்கொள்ளும்படியாக ஆயிற்று. தொல்பொருள் ஆய்வுகள் அனைத்தும் ஆதியாகமத்திற்கு சாதகமாகவே வந்துள்ளன.

ஆதாம், காயீன், சேத், சேம், காம், யாப்பேத், ஏசா, யாக்கோபு, இஸ்மவேல் மற்றும் கெத்துராளின் பிள்ளைகள் என ஏறக்குறைய 10 குடும்பங்களின் தலைமுறைகள் இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த உலகத்தில் முதல் அறுவை சிகிச்சை, ஏதேன் தோட்டத்தில் கர்த்தரால் ஆதாமிற்கு செய்யப்பட்டது. கர்த்தர் ஆதாமை மயக்கமடைய செய்து, அறுவை சிகிச்சை செய்தார்.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. நோவாவிடம் கர்த்தர் கட்ட சொன்னது என்ன?
2. கர்த்தர் ஆபிரகாமை அழைத்த போது அவருடைய வயது என்ன?
3. யாக்கோபிற்கு எத்தனை மகன்கள் பிறந்தனர்?
4. ஈசாக்கிற்கு பிறந்த இரட்டைக் குழந்தைகள் யார்?
5. கர்த்தர் யாக்கோபிற்கு வைத்த பெயர் என்ன?

அந்த முறைதான் இன்று உலகமெங்கும் உள்ள மருத்துவர்களால் பயன்படுத்தப்படும் முறையாக இருக்கின்றது என்பது, திருமறை நம்பகமானது உறுதிப்படுத்துகிறது அல்லவா? **ஆதி2:21,** "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில்ஒ ன்றைஎ டுத்து,அ ந்தஇ டத்தைச்ச தையினால் அடைத்தார்."

கர்த்தர் நோவாவிற்கு பேழையை கட்டும்படி கொடுத்த அளவிலிருந்து தான், கப்பல் கட்டும் நீள அகல உயர விகிதாச்சாரம் இன்று உலகெங்கும் பின்பற்றப்படுகிறது. **(30:5:3) ஆதியாகமம் 6:14,15** "நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாக கீல்பூசு. நீ அதைப் பண்ண வேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்கவேண்டும்."

மாம்சமான யாவருக்கும் உயிர் இரத்தத்தில் இருக்கின்றது என 6000 ஆண்டுகளுக்கு முன்பே கர்த்தர் நோவாவிடம் சொன்னது ஆதியாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. **ஆதியாகமம் 9:4** "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம்." ஆம்! நமது உயிர் நமது இரத்தத்தில்தான் இருக்கின்றது. இதை விஞ்ஞானம் இப்பொழுது ஒத்துக் கொள்கின்றது.

ஆதியாகம புத்தகம் வரலாற்று புத்தகம் அல்ல, ஆயினும் அதில் ஏறக்குறைய 2250 ஆண்டுகள் வரலாறும், இந்த அண்டமும், அதிலுள்ள யாவற்றின் தொடக்கமும் சொல்லப்பட்டுள்ளது. ஆதியாகமம் அறிவியல் புத்தகமல்ல, ஆயினும் அதில் சொல்லப்பட்டுள்ள அறிவியல் மிகவும் துல்லியமானது. அதில் சொல்லபட்டவைகள் உண்மையென தொல்பொருள் ஆய்வுகளும் பறைசாட்டுகின்றன. ஏனெனில், பைபிள் கடவுளின் புத்தகம். அதினால் அதை வாசிப்போம், விசுவாசிப்போம் மற்றும் அதை கடைபிடிப்போம் எல்லாம் வல்ல கர்த்தரால், மீண்டும் மாபெரும் துவக்கத்தினை பரலோகில் பெறுவோம்.

அன்புடன்,
**–ஆசிரியர்**

# ரெபேக்காள்

சகோதரி : பேபி ராஜா



கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கும், மற்றும் பிரியமான அனைத்து சகோதரிகளுக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துக்கள் மற்றும் தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த வருடம் அநேக சகோதரிகளைப் பற்றி வேதாகமத்திலிருந்து பார்த்துள்ளோம். இம்மாதமும் கூட வேதாகமத்திலுள்ள ஒரு பெண்மணியைப் பற்றிப் பார்ப்போம். அவள் பெயர் 'ரெபேக்காள்'. இந்த ரெபேக்காள், ஆபிரகாமின் மனைவியாகிய சாராளின் சகோதரனாகிய பெத்துவேலின் மகள். ரெபேக்காள் அன்பும் இரக்க குணமும் உள்ளவள். ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்கு பெண்கேட்டு, தன் வேலைக்காரனில் உண்மையுள்ள எலியேசரை தன் தேசத்தாரிடத்திற்கு அனுப்பும் போது, அங்கே நடைபெறும் நிகழ்வுகளில் நாம் ரெபேக்காளின் அன்பையும் இரக்க குணத்தினையும் காணவும், கற்றுக்கொள்ளவும் முடிகின்றது.

ரெபேக்காள், தன்னிடத்தில் தாகத்திற்கு தண்ணீர் கேட்ட எலியேசருக்கும், அவனுடன் வந்தவர்களுக்கும், அவர்களனைவரையும் சுமந்து கொண்டு வந்த ஒட்டகங்கள் அனைத்திற்கும் தண்ணீர் வார்த்தாள். இதை ரெபேக்காள் தன் இருதயத்திலிருந்து செய்தார் என்று நாம் அறிய முடிகின்றது. ரெபேக்காளிற்கு, இந்த எலியேசர் தான், மணமுடிக்கப் போகும் ஈசாக்கின் வேலைக்காரன் என்று தெரியாது. அவளைப் பொறுத்தவரை இவர் ஒரு வழிபோக்கன். தாகத்திற்கு தண்ணீர் கேட்கின்றார். உதவ வேண்டும், அவ்வளவு தான். வேத வசனங்களும் நாம் இவ்வாறே இருக்கும்படி நம்மை உற்சாகப்படுத்துகின்றன.

**ரோமர் 12:13** "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்." மற்றும் **எபிரேயர் 13:2** "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு.

பிரியமானவர்களே, ஒட்டகங்கள் எவ்வளவு தண்ணீர் குடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். இதுமாத்திரம் அல்லாமல், அவர்களுக்கு இரவில் தங்க இடமும் உணவும் கொடுத்தாள். மற்றும் ஒட்டகங்களுக்கு தீவனமும் கொடுத்தாள். தன்னுடைய தகப்பனுக்கு அவர்களை அறிமுகப்படுத்தினாள். தன் வீட்டில் உள்ளவர்களுக்கும் அறிமுகப்படுத்தினாள். ரெபேக்காளின் இந்த நற்குணம், அவளுக்கு, வாக்குத்தத்தத்தின் மகனாகிய ஈசாக்கிற்கு மனைவியாகும் பாக்கியத்தினை பெற்றுத் தந்தது.

ரெபேக்காளின் தகப்பனும், சகோதரனும், "இந்த காரியம் கர்த்தரால் வந்தது" என்று விசுவாச அறிக்கை செய்தனர். ஆம், உண்மைதான்! இந்த காரியம் கர்த்தராலே தான் வந்தது. நாம் நம்முடைய தெய்வீக பண்புகளை பாதுகாப்போம். நமக்கான ஆசீர்வாதங்களை, கர்த்தர், தாம் குறித்த வேளையில் தந்து நம்மை உயர்த்துவார். நாம் அன்புள்ளவர்களாக, இரக்கமுள்ளவர்களாக இருப்போம். எல்லாம் வல்ல கர்த்தர் நம் கூட இருந்து நம்மை ஆசீர்வதித்து, நம்மை காத்து வழிநடத்தவராக! ஆமென்.

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. S. லக்ஷிதா – கரூர்
2. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
3. M. ராஜா – கரூர்
4. M. ஜோனா – கரூர்
5. S. கனிஸ்கா – கரூர்
6. A. ஹானா ஜோதி – மதுரை
7. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை
8. P. அன்னாள் – மதுரை
9. P. டேனியல் – மதுரை

# விசுவாசமுள்ள பெண்கள் !

அன்பான சகோதரிகளே, கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிகவும் அடிப்படையான அடித்தளம் தான் விசுவாசம் இதை நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். அதிலும் மிக குறிப்பாக வேதாகமத்தில் சொல்லப்பட்ட பெண்கள், தங்கள் வாழ்க்கையில் எப்பேர்பட்ட விசுவாசம் உடையவர்களாய் இருந்துள்ளார்கள் என்பதை நாம் ஒரு சில உதாரணங்கள் மூலம் தெரிந்தகொள்ளலாம்.

**பெரும்பாடுள்ள ஸ்திரி: மாற்கு 5:21,34,** “பெரும்பாடுள்ள ஸ்திரி”யினிடத்தில் மிகப்பெரிய விசுவாசம் இருந்தது. அந்த விசுவாசம் அவரிடத்தில் (இயேசுவினிடத்தில்) இருந்து வல்லமை புறப்பட உதவியது.

**ரோதை: அப் : 12:12–15,** பேதுருவுக்காக எல்லோரும் ஜெபம் செய்தார்கள். ஜெபித்தது முடிந்த பின்பு, கதவு தட்டும் சத்தம் கேட்டது வந்திருப்பது பேதுரு தான் என்று இந்த ரோதை விசுவாசித்தார். கதவை திறக்கிறார். கூடி வந்த எல்லோரையும் தன் விசுவாசத்தினாலே திகைக்க வைக்கிறாள். நாமும் நம் விசுவாசத்தினாலே பெற்றுக்கொண்டோம் என்று தீர்க்கமாய் வாழ வேண்டும்.

**ஆகார்: ஆதி : 16:1–16: ஆதி : 21:8–21,** தள்ளிவிடப்பட்ட, துரத்திவிடப்பட்ட நிலை. ஆனாலும் தேவன் மேல் வைத்த விசுவாசத்தினாலே, என் நிலை எதுவாக இருந்தாலும், தகுதியில்லா என்னையும் அவர் காப்பாற்றுவார், நன்மை செய்வார் என விசுவாசித்தாள்.

**மரியாள்:** ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள். இந்த உலகம் அங்கீகரிக்காத நிலை, அவமான நிலை ஆனாலும், அவள் தனக்கு கொடுத்த பாக்கியத்தை முழுமையாய் ஏற்றுக்கொண்டாள். அதனால் அவள் பாக்கியம் பெற்றாள். விசுவாசத்தினாலே மகிமையைப் பெற்றுக்கொண்டாள்.

**கானானிய ஸ்திரி: மத் : 15:21–22: மத் : 15:26–28,** தன் மகள் மரிக்கும் தருவாயில் இருக்கும் போது, பிள்ளைகளின் அப்பம் நாய்குட்டிக்கு கிடைக்குமா என ஏங்கும் நிலை. விசுவாசத்தினாலே அவள் பிள்ளை உயிரோடே கிடைத்தது. நம் விசுவாசம், நமது ஆத்துமாவின் மரித்த நிலையையும் உயிர்ப்பிக்கும்.

**ராகாப்: யோசுவா:2:11,** ஒரு வேசியாக இருந்தாலும், தேவனுடைய பிள்ளைகளை அவள் காப்பாற்ற தன் உயிரையும் பணையம் வைத்தாள். அவளுடைய விசுவாசம் அவளையும், அவள் குடும்பத்தாரையும் காப்பாற்றியது.

**எலிசபெத்:** வயதானவர்களாக இருந்தாலும், தங்களால் இனி ஒரு குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது என்ற நிலை இருந்தாலும், தேவனிடத்தில் அவர்கள் விசுவாசம் வைத்ததினாலே இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்ய ஒருவரை அவள் பெற்று எடுத்தாள். இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை அவர்கள் வாழ்க்கையில் அடைந்தார்கள்.

**மார்த்தாள்:** தன் சகோதரன் மரித்து 4 நாட்களாகியும் அவள் இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தினாலே, மரித்த சகோதரனை உயிரோடே பெற்றாள்.

இவர்களை போலவே.... இன்னும் நிறைய பேரை நாம் வேதாகமத்தில் வாசித்து தெரிந்துகொள்ளலாம். இவர்கள் எல்லோரும் நம்மைப் போல, இந்த உலகத்தில் வாழ்ந்த பெண்கள் தான். பெண்களாகிய நாம் நம் விசுவாசத்தினாலே, தோல்விகளை நம் வாழ்க்கையில் வெற்றியாக மாற்ற முடியும்.

இந்த உலகம் கொடுக்கும் நம்பிக்கை, வேதாகம விசுவாசம் இல்லை. நாம் நம் தேவன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தினாலே நம் வாழ்க்கையை வெற்றியின் பாதையில் கொண்டு செல்ல முடியும். II **கொரிந்தியர் 2:14,** “கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.”

– சகோதரி
**பெவர்லி கிங்ஸ்லி**

# காயீனின் வீழ்ச்சி The Fall of Cain

ஆதி 4:1-26

பிரியமான வாலிப தம்பி தங்கைகளுக்கு கிறிஸ்தேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். நம்முடைய அன்றாட வாழ்வில் கடவுளை பிரியப்படுத்தும்படியான ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமென்பது அவசியமாயிருக்கிறது. அது நாம் விரும்பியபடி அல்ல, கடவுள் தம்முடைய வார்த்தையாகிய வேதப் புத்தகத்தில் சொல்லியிருக்கின்றபடி என்பதை நினைவில் கொள்வோம்.

ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தில் காயீன், ஆபேல் என்கிற அண்ணன் தம்பியை குறித்து வாசிக்கிறோம். இருவரும் கர்த்தருக்கென்று (காணிக்கையை) பலி செலுத்த வருகின்றனர். ஆபேல் கடவுளுக்கு பிரியமானதைக் கொடுத்தான். ஆனால் காயீனோ தனக்கு பிடித்த ஒன்றை, கர்த்தர் ஏற்றுக்கொள்வாரென்று கொண்டு வந்தான். ஆனால் இந்த இரண்டு பலிகளில் ஆபேலின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டும், காயீனின் பலி நிராகரிக்கபட்டும் போகின்றது. நாம் சிந்திக்கலாம் இருவரும் கர்த்தருக்கென்று தானே கொண்டு வந்தார்கள் என்று; ஆனால் வித்தியாசம் அவர்களின் சிந்தனையில் இருந்தது. எப்படியென்றால், கர்த்தருக்கென்று கொண்டு வந்த ஆபேலின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது. தனக்கு பிடித்திருந்த ஒன்று இதை கர்த்தருக்கென்று கொடுப்போம் என யோசித்த காயீனின் பலி நிராகரிக்கப்பட்டது.

1. காயீனின் வீழ்ச்சிக்கு காரணம், கர்த்தரின் விதிமுறைகளின்படி அல்லாமல், அவருடைய சொந்த விதிமுறைகளில் கடவுளை அணுக முயற்சித்ததால் வந்தது. இது காயீனுக்கு மட்டுமல்ல நம்முடைய சொந்த விதிமுறைகளின்படி கடவுளை பிரியப்படுத்த முயற்சித்தால்; அதாவது, Bible Studyக்கு போயித்தான் Bibleஐ கத்துக்கணுமா? நான் வீட்டிலிருந்தே படிச்சு தெரிஞ்சுக்குவேன்! Churchக்கு போனாத்தான், பரிசுத்தமா இருந்தாதான், பயபக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்தா தான் கடவுள் ஆசீர்வதிப்பாரா? அப்படியெல்லாம் ஒன்னும் இல்லை என்று நாம் நினைத்தால் நாமும் வீழ்ந்து போவோம். **(நீதி 12:15; பிலி 2:3)** நம்மை மாற்றிக் கொள்வோம்!
2. கடவுளின் கிருபையை நம்புவதைவிட, செயல்கள் மற்றும் சடங்குகள் மூலம் கடவுளின் தயவைப் பெற முயற்சிக்கும் எந்த ஒரு அமைப்பையும் காயீனின் பலி வெளிப்படுத்துகின்றது. நம் மனதில் ஆழமாக ஒன்றை பதிய வைப்போம். சடங்குகள், கலாச்சார செயல்பாடுகள் எதுவுமே ஒரு நாளும் கடவுளின் கிருபையை பெற்றுத் தராது. இப்படித்தான் காயீனின் சிந்தனை அவனை விழச் செய்தது. **(எபே 2:8,9)**.
3. காயீனின் வழி கடவுளுக்கு முன்பாக மனிதனின் அவநம்பிக்கையும், பெருமையையும், காட்டுகிறது **(யாக் 4:6)**. “எனக்கு எல்லாம் தெரியும்” என்கின்ற நிலை மிகவும் ஆபத்தானது.
4. காயீனின் வழி மனிதகுலத்தின் தன்மையை விட பாவத்தையே அது வலியுறுத்துகிறது **(ரோம 3:23)**. எதை செய்தாலும், கடவுள் ஏற்றுக் கொண்டு மன்னிப்பார் என்கிற அலட்சிய போக்கு மிகவும் ஆபத்தானது.
5. காயீனின் வழி கடவுளை நோக்கிச் செல்லும் ஒரு பாதையை விட, பல பாதைகள் இருப்பதாக காட்டுகிறது. எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து விடலாம் என்றல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்று வேதாகமம் நெறிமுறைகளை வகுத்திருக்கின்றது **(மத் 7:13)**. கட்டுப்பாடான வாழ்க்கைக்கு நம்மை பழக்குவோம்.
6. காயீனின் வழி நித்திய ஜீவனைக் காட்டிலும் நித்திய மரணத்திற்கு வழி வகுக்கிறது. எனவே நமக்கென்று ஒரு வழி அல்ல, வேதம் காட்டுகிற சத்தியமாகிய நித்திய வழியில் நடப்போம். **(நீதி 14:12)**.

எனவே, எனக்கன்பான வாலிபர்களே! காயீன் தன் வாலிப நாட்களில் கடவுளிடமிருந்து பெற வேண்டியிருந்த கிருபையையும், நன்மையையும், ஆசீர்வாதத்தையும் விட்டு, தனக்கென்று பாவத்தையும், சுய ஆசைகளும் பெருமையும் வைத்திருந்ததால் அவன் வீழ்ந்து போனான். நாமும் இது போன்ற தவறுகளை செய்யாமல், ஆபேலைப் போல் கடவுளுக்கு எதுப் பிரியம் என்று வேதத்தின் மூலம் அறிவோம்! தேவ ஆசீர்வாதம் பெறுவோம்!

– உங்கள் அண்ணன்
**JP**

பாடம் - 1

## யூத மற்றும் ரோம வரலாற்றாலர்கள்

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

அதன்படி முதலாவது குற்றவாளிகள் என கருதப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்; பின்னர் அவர்களுடைய தகவலின் பேரில், ஒரு திரளான கூட்டத்தாரும் குற்றவாளிகள் என தீர்மானம் செய்யப்பட்டனர்; இவர்களெல்லாம் ரோமபுரியை எரித்த குற்றத்தினால் அல்ல, மாறாக மனிதகுலம் அவர்களை வெறுத்ததினாலேயே அவர்களுடைய மரணம் எல்லா வகையான கேலிக்கூத்துமானது. இந்தக் கூட்டத்தாரை, மிருகத்தின் தோலை போர்த்திக் கொண்டு, நாயைப் போல் கடித்துகுதறி அழித்தனர்; அல்லது சிலுவையில் ஆணியறைப்பட்டனர்; அல்லது இருள் சூழந்த நேரத்தில் வெளிச்சத்தை கொடுக்கும்படியான நெருப்பாக உயிருடன் எரிக்கப்பட்டனர். இவைகளெல்லாம் நடைபெற நீரோ மன்னன் தனது தோட்டத்தைக் கொடுத்து சர்களில் வேடிக்கைப் பார்ப்பது போல பார்த்தான்.

இங்கே தாசிதஸின் (Tacitus) அறிக்கை என்னவெனில், திபேரிய ராயனின் ஆட்சியில் கிறிஸ்து உச்சகட்ட தண்டனையை (சிலுவை மரணம்) பொந்தியு பிலாத்துவின் கரத்தினால் அனுபவித்தார். எதிரிகளின் "துடுக்கான மூடநம்பிக்கைக்காக" இந்த கிறிஸ்தவர்கள் மரிக்கவும் ஆயத்தமானார்கள்; அது ஏனெனில், கிறிஸ்து கல்லறையினின்று மீண்டும் உயிருடன் எழுந்தார் என்ற அவர்களது நம்பிக்கையின் நிமித்தமே!

### கூடுதலான வரலாற்று ஆதாரங்கள்:

இதைப்போன்ற கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவத்தைப் பற்றியுமான குறிப்புகள் சமோசடாவை சேர்ந்த லூசியன் (Lucian of Samosata), மற்றும் தாலஸ் (Thallas) ஆகியோரின் எழுத்துக்களிலும் காணப்படுகின்றன. ரோம பேரரசில் கிறிஸ்துவின் செல்வாக்கு இந்த வரலாற்று பதிவேடுகளில் தெளிவாகக் காணப்படுகிறது.

பாடம் - 2

## ஆதி கிறிஸ்தவ பதிவேடுகள்

**Early Christian Documents**

இதுவரை, யூத மற்றும் ரோம வரலாற்று ஆசிரியர்களின் சாட்சியங்களைக் கேட்டோம். ரோம வரலாற்றில் கிறிஸ்து எழுப்பியிருந்த விளைவையும் கண்டோம். இந்தப் பாடத்தில், ஆதி சபையின் முன்னோடிகளின் எழுத்துக்களை ஆய்வு செய்து, முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைத்தார்கள் என்பதைக் காண்போம்.

### ரோமாபுரியைச் சேர்ந்த கிலெமெண்ட் :

கிலெமெண்ட் என்பவர் கி.பி. 30-ல் பிறந்தார்; அப்போஸ்தலர்கள் காலத்தில் வாழ்ந்தார். அவர் ரோமாபுரியில் கி.பி. 92-100ல் பிஷப்பாக இருந்தார். கி.பி. 95ல் கொரிந்தியர்களுக்கு ஒரு நிருபம் எழுதினார். பிலிப்பியர் 4:3ல் குறிப்பிடப்படுகிற கிலமெந்து என்பவர் இவராக இருக்கலாம் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர். அவர் எழுதின முதல் நிருபத்தின் 32ம் அதிகாரத்தில் கொரிந்தியர்களுக்கு, கிலெமெண்ட் எழுதியதாவது, "யாக்கோபு, தனது நாட்டிலிருந்து லாபானிடத்துக்குப் போய் அங்கே சேவை செய்தான்; அங்கே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் செங்கோல் அவனிடம் கொடுக்கப்பட்டது. .... அவனுடைய (வம்சாவளியில்) மாம்சப் பிரகாரமாக இயேசு கிறிஸ்து பிறந்தார்".

அதிகாரம் 24ல் கிலெமெண்ட் எழுதுகிறார், "பிரியமானவர்களே, கர்த்தர் எப்படி தம்மை நமக்குத் தொடர்ந்து நிரூபித்து வருங்கால உயிர்த்தெழுதலையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முதற்பலனானவராக்கும்படி அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்".

ஒரு சபையின் முன்னோடியால் எழுதப்பட்ட பிந்திய கால திருமறைக்காலத்தின் பூர்வீகப் பதிவேடு இன்றும் இருக்கிறது. இயேசு யாக்கோபின் சந்ததியில் மாம்சத்தில் வந்தவர் என்பதையும்,

தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம், நாமும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவோம் என்று நிரூபிக்கும்படி செய்தார்.

### இக்னேஸியஸ் :

இக்னேஸியஸ், சிரியாவிலுள்ள அந்தியோக்கியாவில் கி.பி. 107-110ல் பிஷப்பாக இருந்தார். ஆதி சபை முன்னோடிகள் எழுதிய முக்கிய பதிவேடுகளில், இவருடைய ஏழு நிரூபங்களும் இடம் பெற்றுள்ளன. கி.பி. 117ல், டிரேஜன் எனும் சக்கரவர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்த போது, இக்னேஸியஸ், சிங்கத்தின் கெபியில் ரோமாபுரியில் போடப்பட்டார். தனது நிரூபங்களில், இயேசுவின் தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் வலியுறுத்தி இக்னேஸியஸ் எழுதியிருந்தார். தண்டிக்கப்படும்படி அவர் ரோமாபுரிக்கு போகும் பாதையில், அவர் ஒரு நிரூபத்தை எழுதி அதில் இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவை ஒரு வரலாற்றுச் சம்பவம் என்று குறிப்பிட்டார்:

“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தேவனால் முன் குறிக்கப்பட்டபடியே, மரியாளின் கர்ப்பத்தில், தாவீதின் வித்தாக, ஆனால் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டார்”.

தாவீதின் வம்சாவளியான இயேசு, மரியாளின் குமாரன், உண்மையாகவே பிறந்து, புசித்தார் குடித்தார், பொந்தியு பிலாத்துவின் கீழ் உண்மையாகவே துன்புறுத்தப்பட்டு, வானத்திலுள்ளோர் பூமியிலுள்ளோரின் பார்வையில் உண்மையாகவே சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்; எல்லாவற்றுக்கும் மேலாக மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, அவருடைய பிதாதாமே அவரை எழுப்பினார். அதேப்போல அவரை விசுவாசிப்போராகிய நம்மையும் எழுப்புவார்'' (டிரேல்லியன்ஸ் 9).

இக்னேஸியஸ் தொடர்ந்து ''அவர் மெய்யாகவே'', அவர் உண்மையிலேயே மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியும், ஆனால் தெய்வீக சித்தத்தின்படியும் வல்லமையின் படியும் உண்மையிலேயே கன்னிகையினிடத்தில் பிறந்து, யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லா நீதியையும் நிறைவேற்றி, உண்மையிலேயே மாமிசத்தின்படி பொந்தியு பிலாத்து, காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதின் ஆட்சியின் கீழ் ஆணியில் அறையப்பட்டார்; தாம் உயிர்த்தெழுந்ததின் மூலம் அனைத்து யுகங்களினூடே ஒரு அடையாளச் சின்னமாகத் திகழுகிறார். எனக்குத் தெரியும், நான் விசுவாசிக்கவும் செய்கின்றேன். அவர் உயிர்த்தெழுந்த பின்பும் மாமிசத்தில் இருந்தார்; அவர் பேதுருவிடத்திலும் அவருடைய சகாக்களிடமும் வந்தபோது, அவர் அவர்களிடம், என்னைத் தொட்டு பிடித்துப் பாருங்கள், நான் ஒரு சரீரமற்ற பிசாசு அல்ல என்றார். அவர்கள் அவரைத் தொட்டுப்பார்த்து, விசுவாசித்தார்கள்; அவருடைய சரீரத்தோடும், இரத்தத்தோடும் சேர்ந்தார்கள். ஆகையால் அவர்கள் மரணத்தைப் பார்த்து பரியாசம் பண்ணி, இல்லை, தங்களை மரணத்துக்கு மேலானவர்களாய் கண்டார்கள். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர்களோடு புசித்தார், குடித்தார்'' (சிமிர்னாக்காரர்கள் 1).

- அடுத்த இதழில் தொடரும்...


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

**வங்கிக் கணக்கில் செலுத்த,**

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# நோவாவை தேவன் தேர்ந்தெடுத்தல்...

கடவுளுக்கு பிரியமான செல்லப் பிள்ளைகளா ! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

நம்மை உண்டாக்கின கடவுள், நோவா தாத்தாவை தேர்ந்தெடுத்தார். இதைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளலாமா?

நோவா தாத்தா வாழ்ந்த நாட்களில், மக்கள் மிகவும் பொல்லாதவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்களுடைய இந்த தீமையான செயல்கள் தேவனுக்கு வருத்தத்தை கொண்டுவந்தது. அதினால் தேவன், உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் அழிக்கப்போவதாக தீர்மானம் செய்தார்.

நோவா மட்டுமே தேவனுக்கு முன்பாக நல்லவராக, தீமை செய்யாதவராக இருந்தார். தேவன் நோவாவை அழைத்து, தன் திட்டத்தை (தீர்மானத்தை) நிறைவேற்ற முடிவு செய்தார். கடவுள் நோவா தாத்தாவை பார்த்து, "நீ கொப்பேர் என்னும் மரத்தால் உனக்கு ஒரு பேழையை (கப்பல்) செய்து, அதிலே அறைகளையும் வைத்து, 300 முழம் நீளமும், 50 முழம் அகலமும், 30 முழம் உயரமுமாய் இருக்க வேண்டும்" என்றார்.

கர்த்தர் சொன்னபடியெல்லாம் நோவா தாத்தா செய்தார் தெரியுமா? அதனால்தான் கடவுள் இவரை தேர்ந்தெடுத்தார். நீங்களும் இந்த மாதிரி பைபிள் மூலமாக கடவுள் சொல்வதை அப்படியே கேட்டு கீழ்படிகிறீர்களா?

அந்த பேழை எவ்வளவு பெருசா இருந்தது தெரியுமா? இந்த பூமியிலுள்ள மிருகங்கள், பறவைகள், பிராணிகள், விலங்குகள் எல்லாவற்றிலும் ஒரு ஜோடும், நோவா தாத்தா, அவர் மனைவி, அவருடைய 3 மகன்கள் மற்றும் அவர்களுடைய மனைவிமார் 3 பேரையும் தாங்கத்தக்க, 3 தட்டுகளை கொண்டதாயிருந்தது. எல்லாரும் ஏறினப் பிறகு தேவன் பேழையின் கதவை அடைத்துவிட்டார். 40 நாள் இரவும் பகலும் விடாமல் மழை பெய்தது. பூமியிலுள்ள எல்லா உயிரினங்களும் தண்ணீரில் மூழ்கி அழிந்துப் போனது. நோவா கடவுளை பற்றி அநேக முறை



சொல்லியும் யாரும் கீழ்படியவில்லை. ஆனாலும் கடைசிவரை சொல்லிக்கொண்டே இருந்தார்.

குட்டீஸ் ! நோவா தாத்தா தேவன் என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்து கீழ்ப்படிந்ததினால், அவரும் அவர் குடும்பமும் பெரிய அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது இன்றைக்கு கடவுள் உங்களையும் சபையை கட்ட, இயேசுவை பற்றி சொல்ல, சுவிசேஷத்தை சொல்ல, சபையில் சின்ன சின்ன ஆவிக்குரிய வேலையில் ஈடுபட கடவுள் உங்களையும் தேர்ந்தெடுக்க விரும்புகிறார், நீங்கள் கடவுளுக்கு, மற்றும் உங்கள் அப்பா அம்மாவுக்கு கடவுளின் வார்த்தையின்படி கீழ்ப்படிந்தால், உங்களையும் ஆபத்திலிருந்து, பாதுகாப்பார், நன்மை செய்வார்.

**மனப்பாட வசனம் : 1 கொரி 1:28** "உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்."

**— அன்பு ஏசுதாஸ்**

இம்மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாளைக் காணும் வாசகர்கள் அனைவருக்கும் கிருபையுள்ள வார்த்தை ஆசிரியர் குழுவின் சார்பாக வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

# யோசேப்பு



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

கானான் என்ற நாட்டில் யாக்கோபு என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு 12 குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பெயர் யோசேப்பு, இவர் யாக்கோபினுடைய 11வது மகன், இவரைப் பற்றிதான் நாம் இம்முறை படிக்கப்போகிறோம். இவன் தன் தகப்பனுக்கு மிகவும் பிடித்தமான பிள்ளை. அதினாலே இவனுக்கு மட்டும் பல வண்ணங்கள் நிறைந்த ஒரு மேலங்கியை இவன் தகப்பன் செய்து போட்டார். இதினாலே அவன் சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டார்கள். அந்த பொறாமையினாலே அவனை கொலை செய்ய முயற்சி செய்து, எகிப்து தேசத்திற்கு போகிற வியாபாரிகளிடம் விற்றுப்போட்டார்கள்.

யோசேப்பு எகிப்து தேசத்திலே போத்திபார் என்பவரிடத்தில் அடிமையாக இருந்தான். ஆனாலும், கர்த்தர் அவனோடு இருந்தபடியினாலே அவன் செய்கைகள் எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். கர்த்தர் அவனோடிருப்பதை கண்ட அவன் எஜமான் போத்திபார், தன் வீட்டின்மேல் அவனை அதிகாரியாக்கினான். ஆனாலும் போத்திபாரின் மனைவி யோசேப்பின் மேல் பொய் பழிபோட்டு அவனை சிறைச்சாலைக்கு அனுப்பினாள்.

அங்கேயும் கர்த்தர் யோசேப்போடு இருந்தார். அதினாலே சிறைச்சாலை அதிகாரி யோசேப்பை சிறையுள்ளுள்ளவர்கள்மேல் விசாரணைக்காரனாக வைத்தான். அங்கேயும் அவன் உண்மையுள்ளவனாய் இருந்தான்.

தேவன் யோசேப்புடனே இருந்தபடியால், அவன் எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தை அடைந்தார். அதாவது எகிப்து தேசம் முழுவதற்கும் அவனை அதிகாரியாக்கினான். தனக்கு கொடுமை செய்த அண்ணன்களை மீண்டும் தான் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தபோது, அவர்களை பழிவாங்க நினைக்காமல் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டான்.

குட்டீஸ் ! உங்கள் வாழ்க்கையிலும், யார் உங்களை என்ன சொன்னாலும், கேலி பண்ணாலும், தீமையை செய்தாலும், கர்த்தருக்கு எல்லா வகையிலும் பிரயோஜனமாயிருந்து கடவுளுடைய குணத்தை வெளிப்படுத்தின யோசேப்பைப் போல இருந்தால், நீங்களும் உயர்த்தப்படலாம்.

**மனப்பாட வசனம் : 1 பேதுரு 5:6** "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

**– குயினி பிரதீப்**




# ஆபிரகாமை அழைத்தல்

அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நாம் ஆதியாகமம் புத்தகத்திலிருந்து, கர்த்தர் ஆபிரகாமை அழைத்ததை பற்றி படிப்போமா?

ஆதாம் ஏவாள் பாவம் செய்து கர்த்தரை விட்டு பிரிந்த பின்பு, கர்த்தர் அவர்களுக்கு சொன்னபடியே இரட்சகரை அனுப்ப, ஆபிரகாம் என்னும் ஒருவரை தெரிந்தெடுத்து அழைத்தார். அவருடைய இயற்பெயர் ஆபிராம் என்பதாகும். அவரது தந்தை பெயர் தேராகு. ஆபிரகாமின் மனைவிக்கு சாராய் என்று பெயர். கர்த்தர் அந்த பெயரை சாராள் என்று மாற்றினார். ஆபிரகாம் தன் உடன்பிறந்தவர்கள் மற்றும் உறவுகளுடன் கல்தேயருடைய நாட்டிலுள்ள ஊர் என்கின்ற பட்டணத்திலே வாழ்ந்து வந்தார்.



அப்பொழுது ஒரு நாள் கர்த்தர், ஆபிரகாமை நோக்கி; “நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்று சொல்லி அழைத்தார்.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தன் மனைவியோடே புறப்பட்டு போனார். அவருடன் அவருடைய சகோதரனின் மகனாகிய லோத்தும் சென்றார். அப்பொழுது ஆபிரகாமிற்கு வயது 75; அவருடைய மனைவி சாராளுக்கு வயது 65 ஆக இருந்தது. கர்த்தர் காண்பித்த திசையிலே, கர்த்தர் குறித்த இடம் நோக்கி ஆபிரகாம் சென்றார்.

ஆயினும் கர்த்தர், ஆபிரகாமின் 100 வயதில் தான், ஆபிரகாம் சாராள் தம்பதிக்கு வாக்குத்தத்தத்தின் மகனாகிய ஈசாக்கினை தந்தார். அவர்கள் இருவரும், முதிர்வயதில் கர்த்தருடைய வல்லமையால் அந்த குழந்தையை பெற்று, அதற்கு ஈசாக்கு என்று பெயர் வைத்தனர். ஈசாக்கு என்றால் சிரிப்பு (நகைப்பு) என்று பொருள். ஆபிரகாம் கர்த்தர் சொன்னதை செய்யும் வரை, ‘அவர் தமக்கு சொன்னதை செய்கின்றவர்’ என முழு நிச்சயமாய் நம்பி, அவருக்கு எல்லா காரியங்களிலும் கீழ்ப்படிந்து நடந்தார். கர்த்தர் தன்னை அழைத்த, தெரிந்தெடுத்த நோக்கத்தினை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராகவே இருந்தார்.

செல்லங்களா, கர்த்தர் நம்மை படைத்ததற்கான நோக்கத்தினையும், தெரிந்தெடுத்ததற்கான காரண காரியத்தினையும் அறிந்து, அதை நிறைவேற்றி, ஆபிரகாமைப் போல, கர்த்தர் சொன்னதை செய்கின்றவர் என்ற விசுவாசத்துடன், அவருக்கு முழுமையாக கீழ்ப்படியும்படி நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம். கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : 2 பேதுரு 1:10** “ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.”

**– பிரியா ஆண்டனி**

# யாக்கோபை முன்குறித்தல்



பிரியமான குட்டீஸ்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த முறை நாம் ஆதியாகமம் புத்தகத்திலிருந்து யாக்கோபைப் பற்றி தெரிந்தகொள்வோம்.

ஆபிரகாம்–சாராளின் மகனாகிய ஈசாக்கிற்கும், ரெபேக்காளிற்கும் திருமணமாகி இருபது ஆண்டுகள் கழித்து, பிறந்த இரட்டை குழந்தைகளில் ஒருவர் ஏசா, மற்றொருவர் யாக்கோபு. கர்த்தர் யாக்கோபை தனது வாக்குத்தத்தத்திற்கு முன் குறித்தார். யாக்கோபு என்னும் பேரை இஸ்ரவேல் என்று மாற்றி, அவனை ஆசீர்வதித்தார்.

கர்த்தரால் வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களை பெற்ற யாக்கோபு, அந்த



ஆசீர்வாதங்களை குறுக்கு வழியில் பெற்றுக்கொள்ள ஆசைப்பட்டு, தன் சகோதரன் போல வேடமிட்டு, வயதின் முதிர்வினால் கண்பார்வை குறைபாடுள்ள தன் தகப்பனை ஏமாற்றி, ஆசீர்வாதங்களைப் பெற முயன்றான். என்ன நடந்தது தெரியுமா? அவரது சகோதரனாகிய ஏசா தன்னை கொலை செய்ய போகின்றதாக திட்டம் தீட்டியதை அறிந்து, உயிருக்கு பயந்து, தான் குறுக்கு வழியில் பெற்றுக் கொள்ள நினைத்த ஆசீர்வாதங்களை அனுபவியாமல், தன் இருந்த நாட்டை, தகப்பன் வீட்டை எல்லாம் விட்டுவிட்டு வெறுமையாக ஒன்றும் அனுபவியாமல் ஓடிப்போனார்.

அப்படி அவன் செல்லும் வழியில், பெத்தேல் என்ற இடத்தில் கர்த்தர் அவனுக்கு சொப்பனத்தில் தரிசமானார். அப்பொழுது யாக்கோபு, கர்த்தர் தனக்கு தரும் ஆசீர்வாதங்கள் எல்லாவற்றிலும் தசமமாகம் தருகின்றதாக பொருத்தனை ஒன்று செய்துகொண்டார். கர்த்தர் தாம் சொன்னபடியே யாக்கோபை, இரண்டு பெரிய பரிவாரங்கள் உடையவனாக ஆசீர்வதித்தார். யாக்கோபு ஏறக்குறைய 20 ஆண்டுகள் கழித்து, மீண்டும் தன் தகப்பன் வீட்டிற்கு, தனது மனைவிகள் மற்றும் பிள்ளைகளுடன் திரும்பி வந்தான். ஏசா யாக்கோபை ஒன்றும் செய்யாமல், அவனோடு சமாதானமாயிருக்கும்படி செய்தார்.

குட்டீஸ், கர்த்தர் நம்மை ஆசீர்வதித்தால், அந்த ஆசீர்வாதம் நேர்மையான வழியல் தான் வரும். அந்த ஆசீர்வாதம் நமக்கு சமாதானத்தை தரும்.

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 10:22** "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்."


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.* **Salvation TV :** *Every Sunday 2.00 p.m.*
**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382
**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)
**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)
**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)
**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)
**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

## ஜனவரி மாத கேள்விகள்

1. ஆண்டவர்

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-03-2022**


**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431


### சென்ற இதழ் பதில்கள்

1. மத்தேயு 18:20
2. வெளி 14:7
3. 1 பேதுரு 1:17
4. ரோமர் 10:12
5. 2 தீமோ 2:1
6. யோவான் 9:31
7. லூக்கா 2:37
8. சங் 65:11
9. சங் 29:2, 96:9
10. எரேமியா 29:12

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
2. A. ஆனி விக்டோரியா - சென்னை
3. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
4. Mrs. D. மீனாள் - மூலனூர்
5. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
6. Mrs. ஜெனி - கரூர்
7. J. விஜய் - மதுரை
8. Mrs. சித்ரா நாகலிங்கம் - திருச்சி
9. Mrs. J. ஜான்சி - ஆனைமலை
10. A.G. சாமுவேல் - ஒடிசா
11. Mrs. மேரிராஜ் - மதுரை
12. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
13. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
14. C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
15. Mrs. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
16. Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
17. Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
18. Dr. D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
19. Mrs. சாந்தி ஜோயஸ் - திருச்சி
20. Mrs. ராணி சாந்தகுமார் - மதுரை
21. J. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
22. Mrs. R.P. டேவிட் - ஏற்காடு
23. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
24. R. ஞான சிரோன்மணி - மதுரை
25. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
26. Mrs. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
27. S. ஜெயராஜ் - கோவை
28. Mrs. பாக்கியராஜம் - மதுரை
29. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
30. R. சரோஜா - தென்கலம்
31. Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
32. D. குளோரி திலகவதி - சென்னை
33. Mrs. லீலா ஜோசப் - கோவை
34. A. டேவிட் விஸ்வநாதன் - கோவை
35. G. பீற்றர் பால்ராஜ் - ஆறுமுகநேரி
36. Mrs. இந்திரா பாண்டி - மதுரை
37. P. சூரியபிரியா - மதுரை
38. A. ஆனந்த கதிரோன் - சென்னை

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th February 2022
Posted at Arasaradi HPO on 10th 11th February 2022

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்




## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To